தேதி:-24.08.2021 Prob.No.3-2018 ம.சா. 1 (திரு.ஞானசேகர்

குறுக்கு விசாரணை ( 4 மற்றும் 6ம் எதிர்மனுதாரர் தரப்பில்) :-

**என்னுடைய தகப்பனார் பெயர் ராஜூநாடார். தாயார் காசியம்மாள். 1, 3, 4ம் எதிர்மனுதாரர்கள் என்னுடைய சகோதரிகள். 2 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள் என்னுடைய சகோதரர்கள். என்னுடைய தகப்பனார் பங்கஜம் காலனி கதவு எண்.17ஐ பொறுத்து 14.12.1994ல் ஒரு உயில் எழுதி வைத்தார். அந்த உயிலில் கதவு எண்.17ஐ பொறுத்து பெண் பிள்ளைகளுக்கு எழுதி வைக்கவில்லை. அந்த உயிலினை என் தகப்பனார் பேலஸ் ரோட்டிலுள்ள பத்திர அலுவலகத்தில் பதிவு செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த உயிலில் கதவு எண்.17-ன் ஒரு பகுதியைப் பொறுத்து பெண்பிள்ளைகளுக்கும், என் தகப்பனார் பாத்தியப்படுத்தியிருந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் 20.09.1995-ல் காலமானார். பங்கஜம் காலனிக்கும், பேலஸ் ரோட்டிற்கும் இடையில் சுமார் 1-1/2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரி. என் தாயார் முதலில் 27.06.1994-ல் ஒரு உயில் எழுதி வைத்தார். அந்த உயிலின் படி தாவா சொத்தான கதவு எண்.47-ஐ எல்லா குழந்தைகளுக்கும் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த உயில் பேலஸ் ரோட்டிலுள்ள பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதென்றால் சரிதான். பின்னிட்டு என் தாயார் 21.06.2016-ம் தேதி ம.சா.ஆ.14 உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான், அந்த உயிலும் பேலஸ் ரோட்டிலுள்ள பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்சரிதான். அந்த உயிலை என் தாயாரை ஏமாற்றி எழுதி வாங்கியதாக என் தாயாருக்கு எப்போது தெரியும் என்று எனக்குத் தெரியாது. என் தாயார் உயிருடன் இருக்கும்போது உயிலை ஏமாற்றி லலிதா எழுதி வாங்கியதாக என்னிடம் சொல்லவில்லை. சாட்சி**

தானாக சொல்லக்கூடிய சூழ்நிலையில் இல்லையெனக் கூறுகிறார். உயிலை ஏமாற்றி வாங்கியது சம்பந்தமாக என் தாயார் உயிரோடு இருக்கும்வரை லலிதா மீது சட்டப்படி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என் தாயார் உயில்பத்திரம் பதிவு செய்யப்பட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினாரா என்று எனக்குத் தெரியாது. என் தாயாரை ஏமாற்றி லலிதா உயில் எழுதி வாங்கிய விபரத்தை என்னிடம் 31.01.2018-ஆம் தேதி என் தாயார் சொன்னார். மேற்படி விபரம் தெரிந்த பின்பு நான் லலிதாவின்மீது சட்டப்பூர்வமாக புகார் மற்றும் நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை. 31.01.2018-ம் தேதி எழுதி வைத்த உயிலின் மூலம் என் தாயார் ம.சா.ஆ.14 உயிலை ரத்து செய்தார். ம.சா.ஆ.4 உயிலில் ஏற்கனவே லலிதா தன்னை ஏமாற்றி ம.சா.ஆ.14 உயிலை எழுதி வாங்கியதாக சொல்லவில்லை. (சாட்சி உயிலை பார்த்து சொல்கிறார்). 2016-ம் ஆண்டு எழுதி வைத்த உயிலில் ஆண்பிள்ளைகளுக்கு சொத்து கொடுக்கவில்லை என்பதால் மாற்றி எழுதுவதாக ம.சா.ஆ.4-ல் என் தாயார் கூறியுள்ளார் என்றால் சரிதான். ம.சா.ஆ.4 உயிலில் ஏற்கனவே தாயார் எழுதிய 27.06.1994 உயிலை ரத்து செய்வதாக சொல்லவில்லை, ம.சா.ஆ.14 உயிலில் ரத்து செய்ததாக கூறியுள்ளார்.அதனால் ம.சா.ஆ.4 உயிலில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆதார் கார்டு போட்டோ எடுக்க வேண்டுமென்று அழைத்துச் சென்று என் தாயாரிடம் என் சகோதரி உயில் எழுதி வாங்கியதாக இந்த வழக்கிற்காக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் 03.01.2013-லேயே ஆதார் அட்டை வாங்கிவிட்டார் என்றும், 2016-ம்ஆண்டில் ஆதார் அட்டைக்காக புகைப்படம் எடுக்க அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆதார் அட்டை திருத்தம் என்று சொல்லி

அழைத்துச் சென்றுள்ளார்கள். ஆதார் அட்டையில் இனிசியல் இல்லை அதை மாற்ற வேண்டுமென்று கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றுள்ளார். 2013-ம்ஆண்டு வழங்கப்பட்ட ஆதார் அட்டையில் இனிசியல் உள்ளதென்றும், நான் இனிசியல் திருத்தம் என்று அழைத்துச் சென்றதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2016-ம் ஆண்டு ஆதார் அட்டை திருத்தம் என்று சொல்லி என் அம்மாவை அழைத்துச் சென்றது எனக்கு நேரடியாகத் தெரியாது. 2018-ம் ஆண்டு என் அம்மா சொல்லி தெரியும். என் தாயார், லலிதா, ரவீந்திரன் ஆகிய மூவரும் என் தாயார் சாகும்வரை பங்கஜம் காலனி கதவு 17 வீட்டில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ.4 உயில் எழுதும் போது நான் உடனிருந்தேன். என் தாயார் சொல்ல சொல்ல நான் கையால் பேப்பரில் எழுதி பின்னர், ஸ்டார் ஜெராக்ஸ் கடையில் கம்ப்யூட்டர் டைப் செய்து வாங்கினேன். உயிலை தயார் செய்தது நான் என்று அதில் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். என் தாயார் வீட்டில் வைத்து ம.சா.ஆ.4 உயிலில் கையெழுத்து செய்தார். என் அம்மாவிற்கு தெரிந்த என் நண்பர் செந்தில்குமார் சாட்சிக் கையெழுத்து செய்தார் மற்றும் தூரத்து உறவினரான ரமேஷ் கையெழுத்து செய்தார். மேலும், சங்கிலி என்ற உறுதிமொழி ஆணையரும் கையெழுத்து செய்தார். சங்கிலி எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது, அவர் என் அம்மாவிற்கு தெரிந்தவர். என் அம்மா சொல்லி அவர் என் வீட்டிற்கு வந்தார். மூன்றுபேரும் கையெழுத்து செய்யும்போது நான் இருந்தேன், பார்த்தேன். சங்கிலி சாட்சியாக கையெழுத்து போட்டாரா என்றால் அவர் முன்னிலையில் கையெழுத்து செய்ததாக அவர் கையெழுத்து செய்தார். என் முன்னிலையில் கையெழுத்து செய்ததாக உயிலில் சங்கிலி குறிப்பிடவில்லை. சங்கிலி வேறு

ஏதும் ஆவணத்தில் என் அம்மா மற்றும் சாட்சிகளிடம் கையெழுத்து வாங்கினாரா என்று எனக்குத் தெரியவில்லை. ரிஜிஸ்டரில் எதுவும் கையெழுத்து வாங்கினாரா என்று எனக்குத் தெரியவில்லை. உறுதி மொழி ஆணையரிடம் பீஸ் கொடுத்து என் அம்மா இரசீது வாங்கினாரா என்று எனக்குத் தெரியாது. என் முன்னிலையில் பணம் கொடுத்து இரசீது வாங்கவில்லை. 05.04.2018-ம் தேதி குணாநிதி என்ற வழக்கறிஞர் மூலம் நானும், என் சகோதரரும் என் சகோதரிகளுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினோம். அது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பாகும். அது எ.ம.சா.ஆ.1 ஆகும். அந்த அறிவிப்பில் 27.06.1994-ம் தேதிய உயில் படி உரிமை கொண்டாடினேன் என்றால் சரிதான். சாட்சி தானாக தவறுதலாக சொல்லப்பட்டுள்ளதாக கூறுகிறார். அறிவிப்பில் ம.சா.ஆ.4 உயில்படி உரிமை கொண்டாடவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞரிடம் சொன்னோம்அவர் அனுப்பவில்லை. தவறுதலாக விடுபட்டுவிட்டது என்று வழக்கறிஞர் குணாநிதி சொன்னபின்னர் அவர் மூலமாக ரீ-ஜாயிண்டர் நோட்டீஸ் அனுப்பினேன். சாட்சி தற்போது அவர் செய்தது தவறு என்று தெரிந்ததால், வேறு வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பியதாக கூறுகிறார். ம.சா.ஆ.14 உயிலை மோசடியாக என் தாயாரிடம் என் சகோதரி எழுதி வாங்கியதாக நான் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றும், வழக்கிற்காக கூறியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.14 உயில் என் தாயார் தானாக முன்வந்து எழுதி வைத்த உயில் என்றால் சரியல்ல. 31.01.2018-ம் தேதியிட்ட ம.சா.ஆ.4 உயிலானது என் தாயார் எழுதி வைத்த உயில் அல்லஎன்றும், அதில் இருப்பது என் தாயாரின் கையெழுத்து இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர்களை

**ஏமாற்றுவதற்காக ம.சா.ஆ.4 உயிலை நான் தயாரித்து, இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.14 உயில் இன்றைய தேதிவரை ரத்து செய்யப்படவில்லை என்றும், அந்த உயிலின்படி எனக்கோ, இரண்டாம் எதிர்மனுதாரருக்கோ சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 உயிலலை பதியாததற்கு முக்கிய காரணம் ஏதும் உள்ளதா என்றால் அதுபற்றி என் அம்மாவிடம்தான் கேட்கவேண்டும். நான் என் அம்மாவிடம் உயிலை பதிய வேண்டுமென்று ஆலோசனை சொன்னேன், அதற்கு அவர் சூழ்நிலை சரியில்லை பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்.**

**மறுவிசாரணை- இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.